# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 27/2026 LW– 6 PW– 4

| | |
|---|---|
| Name | : கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : முருகேசன் |
| Village | : திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of April 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் பகல் 3:25 P.M. – 4:00 P.M.

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.06.2025ம் தேதி 13.15 மணிக்கு நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் இருந்து SP/G3/2445/15504/25, Date : 24.06.2025 ன் பிரகாரம் வரப்பெற்ற தபாலை பார்வையிட்டு நத்தம் காவல் நிலைய குற்ற எண்.300/2025, பிரிவுகள் 296(பி), 351(2) BNS and 4 of TNPHW Actஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல் தகவல் அறிக்கையின் அசலை நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு

அனுப்பியும், எனது புலன் விசாரணைக்கு ஒரு நகலை எடுத்துக் கொண்டு 24.06.2025ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடமான செந்துறை மங்களப்பட்டியில் உள்ள பச்சையம்மாள் என்பவரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் முருகேசன், சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4ஆகவும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் சாட்சிகளான ராஜா, விஜய், சேவுகன், முருகேசன், சிவலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதியான பச்சையம்மாள் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் தற்கொலைக்கு முயன்று சுயநினைவில்லாமல் இருந்ததால் அவரை விசாரிக்க முடியவில்லை. எதிரிகளை தேடி வந்த நிலையில், 1வது எதிரி ஆண்டிச்சாமி என்பவரை 25.06.2025ம் தேதி காலை 6.00 மணிக்கு சிரங்காட்டுபட்டியில் அவரது வீட்டின் அருகே வைத்து கைது செய்தும், 2வது எதிரி முத்துச்சாமி என்பவரை 6.30 மணிக்கு சிரங்காட்டுபட்டியில் அவரது வீட்டின் அருகே வைத்து கைது செய்தும், 3வது எதிரி துரைராஜ் என்பவரை 7.00 மணிக்கு கருத்தலக்கம்பட்டியில் அவரது வீட்டின் அருகே வைத்து கைது செய்தும், 4வது எதிரி செல்லம் (எ) செல்வம் என்பவரை 7.30 மணிக்கு சின்னையம்பட்டியில் அவரது வீட்டின் அருகே வைத்து கைது செய்தும், 5வது எதிரி கண்ணன் என்பவரையும், 6வது எதிரி வீரப்பன் என்பவரையும் 8.15 மணிக்கு உலுப்பகுடியில் ஊர் மந்தையில் வைத்து கைது செய்தும், 7வது எதிரி தயாளன் என்பவரை 9.00 மணிக்கு மதுரை மாவட்டம், அய்யூரில் அவரது வீட்டின் அருகே வைத்து கைது செய்தும், கைது பற்றிய தகவலை அவர்களது உறவினர்களுக்கு தெரிவித்தும் காலை 10.00 மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து

26.06.2025ம் தேதி எதிரிகள் மீது பிரிவு 296(பி), 351(2) BNS and 4 of TNPHW Actன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) 24.6.2025ஆம் தேதி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் பச்சையம்மாள் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு பாதி பச்சையம்மாள் அவரது வீட்டில் முன்பு நின்று கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த எதிரிகளிடம் உங்களை நம்பி தான் பிஏசிஎல் நிறுவனத்தில் பொதுமக்களிடம் இருந்து பணம் வசூல் பண்ணி கட்டினேன் என்று சொல்லி கேட்டபோது எதிரிகள் அவரை அசிங்கமாக திட்டி இனிமேல் பண விஷயத்தை பேசினால் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பச்சையம்மாள் தனது புகாரில் 70 நபர்களிடம் பணம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த நபர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

4) பச்சையம்மாள் தனது புகாரில் மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து எதிரிகளிடம் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் பணம் கட்டிய நபர்கள் பணத்தைக் கேட்டு அசிங்கமாக பேசியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். குடும்பத்தில் உள்ள நபர்களும் என்னை கண்டபடி திட்டுகிறார்கள் என்று பச்சையம்மாள் புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள், பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாக புகார் மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் PACL நிறுவனத்தில் நிறுவனராகவோ, மேலாளராகவோ இல்லை என்றால் சரிதான். PACL நிறுவனத்தின் இயக்குநர்கள், மேலாளர்கள், பணியாளர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

5) பட்டியல் சாட்சி 1, அ.சா.1, 2 ஆகியோரை விசாரித்து PACL நிறுவனத்தில் பச்சையம்மாள் பணம் கட்டியது தொடர்பான ஆவணங்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பச்சையம்மாள் குடும்ப நபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் வாதியை தரக்குறைவாக பேசவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றால் சரியல்ல. வாதியின் குடும்பத்தார்கள் பச்சையம்மாளை மதிக்காமல் தரக்குறைவாக பேசியதால்தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் வெவ்வேறு ஊரை சார்ந்த நபர்கள் என்றாலும், நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் குடும்பத்தாரின் செயலினால் பச்சையம்மாள் பாதிப்படைந்துள்ளார் என்றாலும், அதனால்தான் பச்சையம்மாளின் குடும்பத்தாரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.27/2026

Co-Ordinater @ Court Point

(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point

Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல– சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.18 17:52:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்